Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆனி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரி௵ ஐப்பசிமீ ருஉ வெள்ளிக்கிழமை (21 October 1960) [இல-உக]

அரசியல் அலை

# நிதி அமைச்சர் அரசியற்றிட்ட விதி அமைக்கின்றாரா?

## சமட்டி முழக்கம் நடந்த திருமலையில் 'நமக்கு அது சரிவராது' என்றார் பீலிக்சு

## வெளிப்படையாகிறது அரசியல் வேடம்

திருக்கோணமலையிலேதான் சமட்டி ஆட்சித் திட்டத்தைச் சமட்டிக்கட்சியினர் உறுதிப்படுத்தினர். சமட்டி ஆட்சிக்குச் சம்மதம் கொடுக்காத எந்த அரசியற் கட்சியும் ஆட்சி புரிவதற்கு ஆதரவு கொடுக்க மாட்டோம் என்று அடிக்கடி அழுத்தம் திருத்தமாக முழங்கி வந்த சமட்டிக் கட்சிப் பாராளுமன்றத்து உறுப்பினர்கள் இப்பொழுதுள்ள ஆட்சிக் கட்சியுடன் எவ்விதமாக நடந்து கொள்கின்றார்கள் என்ற கேள்விக்கு ஒருவரும் விளக்கம் கூற முடியாமல் இருக்கின்றது. நடந்தது என்ன?

அமைச்சர்களும் அலை அலையாக வடக்கிலும் கிழக்கிலும் வந்து மோதியபடி இருக்கின்றார்கள். திரையில் எழுந்து வரும் நுரைகள் போன்று அன்னாரின் சொற்பொழிவுகள் இருக்கின்றன. "அன்பர்களே அஞ்சவேண்டாம்" பத்தர்களே பயப்படவேண்டாம், எல்லாரும் ஒன்று, எக்காரியமும் நன்று" என்றவிதமாகத் தேன்மொழி தீட்டி வரும் அமைச்சர்கள் இடையில் மறந்துபோய் உள்ளதை உள்ளபடி உரைத்தும் விடுகிறார்கள்.

இப்பொழுதுள்ள ஆட்சிக் கட்சியின் திட்டம் என்ன, செயல் முறை என்ன.

1. ஒற்றை ஆட்சியன்றி வேறொன்றும் இங்கே இடம்பெறாது.

2. தனிச்சிங்களமே அரசமொழி. இனி வேறு மொழிக்கு இடம் இல்லை.

3. கல்விக் கழகங்களின் முகாமை ஆட்சிகளில் இருக்கும்; இருக்கவே ஆட்சி மதம் ஆட்சிபுரியும். எனவே ஏனைய மதங்களுக்கு........?

4 பிரதேச சபைகள் நிறுவப்படும். ஆனால் பிரதேசச் சபைகளின் அதிகாரம் எவ்வளவு என்பதுதான் கேள்வி. பிரதமர் இந்த இரகசியத்தை நகரசபை மாநாட்டிலே பரகசியப் படுத்திவிட்டார். மத்திய ஆட்சிக்கு மாறாகவும் அதன் மதிப்பைக் குறைக்கவும் அடிப்படை அதிகாரத்தைத் தாக்கவும் எந்த உள்ளூர் ஆட்சி சபைக்குக் கூடுதலான அதிகாரமும் வழங்கப்படமாட்டாது என்பதே.

5. பள்ளிக்கூடங்கள் பறிபோகின்றன. பழைய பண்பும் பறிபோகும், தனிச் சிங்களமும் அரிஆசனம் ஏறும், அதன் வழி மற்றதும் இனித் தாண்டவமாடும்.

இந்த நிலைமையில் ஆட்சிக் கட்சிக்கு எதிர்க்கட்சியாகச் சமட்டிக் கட்சி முறைப்படி இயங்க வேண்டியதுநெறி. அவ்வாறின்றி ஆட்சிக் கட்சிக்குமில்லை எதிர்க்கட்சிக்கும் இல்லை என்றால் அர்த்தம் என்ன?

---

### வண் மேற்கு ஸ்ரீ. விசுவேசப்பிள்ளையார் கோவில் வருடாந்தக் கூட்டம்

மேற்படி கோவிற் பரிபாலன மகா சபையின் பதினைந்தாவது வருடாந்தக் கூட்டம் புரட்டாதி (அக்டோபர்) மாதம் 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை 16-10-60 பிற்பகல் கோவில் மண்டபத்தில் தலைவர் முகாந்திரம் க. துரையப்பா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

வருடாந்த அறிக்கை, வருடாந்த வரவு செலவுக் கணக்குகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பட்டன. கோவிற்காரியங்கள் யாவும் வழமைபோல் சிறப்பாக நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். புதிய வருடத்திற்குப் பன்னிருவர்கொண்ட நிர்வாக சபையும் பின்வரும் உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப் பெற்றார்கள்.

தலைவர் திரு. தி. செல்லத்துரை பி. ஏ. கோவில் அதிபரும் தனாதிகாரியும் திரு. க. அப்பையா, காரியதரிசி திரு. க. செல்வராசா, கணக்குப் பரிசோதகர் திரு. வே. சிவசுப்பிரமணியம்.

---

### நற்சிந்தனை

பண்டயனும் மாலுமடி
  பரவவருள் தெய்வம்
பரியெல்லாம் நரியாகப்
  பணித்தபர தெய்வம்
மண்டலத்தி லுயிரெல்லாம்
  வணக்கவருள் தெய்வம்
மருவியென் சிந்தையிலே
  புகுந்துறையுந் தெய்வம்
கண்டெவரும்சொல்லவொணுக்
  கதிசேரும் தெய்வம்
காதலிக்கும் மெய்யடியார்க்
  கருள்செய்யும் தெய்வம்
தண்டரளம் விளங்கிலங்கை
  நகர்வாழுந் தெய்வம்
தானக இருக்கின்ற
  தெய்வமிதே தெய்வம்.

(சிவ தொண்டன்)

---

### பண்டிதர் ஸ்ரீ. நமசிவாயதேசிகருக்கு வெள்ளி விழா

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமான் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புராதன பாடசாலையாகிய உடையார் பள்ளி என வழங்கும் வீமன்காமம் சிவசுப்பிரமணிய வரோதைய வித்தியாசாலையில் 25 வருடகாலமாக ஆசிரிய சேவை செய்து பூர்த்தி செய்த நமசிவாய தேசிகர் அவர்களுக்கு 5-11-60 ல் பாடசாலை ஆசிரியர் மாணவர் பெற்றோர் முதலியோரால் ஒரு வெள்ளி விழா நடாத்தப்பெறும். அத்தருணம் பழைய மாணவர் உட்படப் பல பெரியார்கள் பாராட்டுரை வழங்குவார்கள்.

---

## சைவம் வளர்க்கும் சங்கங்கள் அத்தியாவசியம்

### சைவப்புலவர்கள் சங்கம் நிறுவப்பெற்றது

சைவம் குன்றுமோ என நாம் எண்ணிய நேரத்தில் இத்தகைய சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது ஒரு பெருங் கைங்கரியமாகும்.

நாவலர் பெருமான் அன்று தோன்ற வேண்டிய அவசியம் இருந்தது. அன்னார் செய்த சைவத் தொண்டினை உருக்குலையாமல் செய்ய மெய்யறிவு நிரம்பிய சைவப்புலவர் சங்கம் இன்று அவசியமாகின்றது என்று விஜயதசமியிலன்று மல்லாகம் இந்து ஆங்கிலக்கல்லூரியில் சைவப்புலவர் சங்கத்தினைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசும்போது இந்துசாதனப் பத்திராதிபர், சைவப்பெரியார் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் கூறினார்கள்.

அன்னார் தொடர்ந்து உரையாற்றும்போது புலமையும், தெய்வத்தன்மையும் சேர்ந்த தகைமையே சைவப்புலவர் பதவியாகும். மற்ற ஆசிரியர்களுக்கில்லாத பெரும் பொறுப்புக்கள் உங்களுக்கிருக்கின்றன. அரசாங்கம் பாடசாலைகளை எடுக்கும் இவ்வேளையில் பல ஆசிரியர்களும் பலவேறு அபிப்பிராயங்களைப் பத்திரிகைகளில் வெளியாக்கி வருகின்றார்கள். அதனைப் பொறுத்தமட்டில் அபிப்பிராய பேதங்களுக்குக் காரணங்கள் இருக்கத்தான் வேண்டுமென்றாகின்றது, சைவப்புலவர்களோ சமய போதனைகளைச் சிதையாமல் காத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றார்களென்றும் குறிப்பிட்டார்கள்.

சங்கத்தின் இன்றியமையாமையைக் குறிப்பிட்டுப் பேசிய சைவப்புலவர் வ. செல்லையா அவர்கள் தமது சொற்பொழிவில் பொருள் மீது கருத்தில்லாது அறிவொன்றினையே குறிக்கோ

தொடர்ச்சி 6ம் பக்கம்)

---

முற்போக்கு எழுத்தாளர் கூட்டத்தில்

## வேண்டுகோள்

"தொல்காப்பியத்தைப் படிக்க முடியாதெனினும் பழந்தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றினையாகுதல் முற்போக்கு எழுத்தாளர் பயிலுதல் வேண்டும். இப்பயிற்சி அவர்களுக்குத் தமிழ்மரபை அறிவுறுத்தித் தமிழ்நெஞ்சை உண்டாக்கும்" என்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொண்டாடிய கணேசையர் நினைவு விழாவிற் பேசிய பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் குறிப்பிட்டார்கள். "பிழைகள் மலிந்த ஒரு வாக்கியத்திலுள்ள எழுத்துச் சொற்பிழைகளையும், பிறவழுக்களையும் சுட்டிக் காட்டத்தக்க ஆற்றல் கைவரப்பெறாதவர்கள் எவரும் நிலைத்துநிற்கும் பண்பு நிறைந்த இலக்கியத்தைப் படைக்கமுடியாது.

முற்போக்கு எழுத்தா[illegible] நான் வரவேற்கிறேன். தமிழ்ச் சமுதாயத்திடையேயுள்ள பல குருட்டுப் பழக்க வழக்கங்களையும், அநீதிகளையும் உங்கள் எழுத்தின் ஆற்றலால் இன்னும் நீங்கள் நீக்கவில்லை; விரைவிலே நீக்குங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் உங்கள் உரைநடை தமிழ் மரபைச் சிதைக்கும் முறையில் அமைவது வரவேற்கத்தக்கதன்று. தமிழ் உரைநடையை வளஞ் செய்யவேண்டிய நீங்கள் அறிந்தோ அறியாமலோ அதனைச் சிதைத்து விடுகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொழிப் புலமை நிறைந்த[illegible]வர்களே மொழியினை வளம்படுத்தும் உரிமை உடையவர்கள். மொழிப் புலமை இல்லாதவர்கள் மொழியை வளம்படுத்த முடியாது என்று தொடர்ந்து பேசும் போது அவர் குறிப்பிட்டார்.

---

### மஹா கும்பாபிஷேகம்

கொழும்பு மாநகர் செட்டியார் வீதியில் சர்வான்மாக்களும் வழிபட்டுய்யும்பொருட்டு திருக்கோவில் கொண்டெழுந் தருளியிருக்கும் சர்வாபீஷ்டவரத ஸ்ரீ முத்துவிநாயக சுவாமிக்கும் ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரமூர்த்தி முதலிய பரிபார மூர்த்திகளுக்கும் ஐப்பசி மீ 15 ந உ (31-10-60), திங்கட்கிழமை மஹா கும்பாபிஷேகஞ் செய்யப்பெறும். கர்மாரம்பம் முதலியவை ஐப்பசி 8 உ (24-10-60) திங்கட்கிழமை இரவு ஆரம்பமாகும். ஏனைய கிரியைகள் அடுத்த நாட்களில் தொடர்ந்து நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரி ஹூ ஐப்பசி மீ
௫ உ வெள்ளிக்கிழமை


## பூசைக்குள்ளே கரடி புகுந்தாற்போல!

அனைத்தும் அரசியல் ஆதிக்கத்தின்பாற்பட்டதாக இருத்தல் வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருக்கும் சுதந்திரக் கட்சி ஆட்சியாளர் பழங்காலத்திலே பரோபகாரிகள் நிறுவிய பன்னூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களின் (முகாமையை) அதிகார உரிமையை அரசாங்கத்துக்கு எடுத்துக்கொடுக்கும் சட்டதிட்டத்தை மக்கள் சபையில் கல்வி அமைச்சர் மூலமாகக் கொண்டுவந்திருக்கின்றனர். அதிகார வேட்கையே ஒழுங்குக்கு அமையாது. அவ்வாறே இந்த அதிவிநோத சட்டதிட்டத்தைக் கடுகதியாக விவாதித்து முடிவு செய்தல் வேண்டுமென்று ஆட்சியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

யாதோ புற்றெடுக்க அரவம் புகுந்தவண்ணம் புனித நோக்கத்துடன் புண்ணிய கைங்கரியத்துக்கென நிறுவப்பெற்ற கல்விக்கழகங்களை அரசு செலுத்துவோர் எடுத்து நடத்துவது கலிகால விபரீதமேயன்றி வேறென்றன்று. ஆனால் அந்த விபரீதம் சொல்லளவிலமையாது செயலிலும் நிகழப்போகின்றதென்று கல்வி அமைச்சரின் புதுச்சட்டத்திட்டம் விடுக்கின்ற எச்சரிக்கையைச் சைவ நன்மக்கள் கண்டும் கேட்டும் வாளாவிருக்கப்போகின்றார்களா? வாளாவிருந்து முன்னோரின் பொன்னனைய மொழிச் செல்வத்தையும் இறைநெறி வளத்தையும் இழக்க விரும்புகின்றார்களா? விரும்பிப் பழைய பாரம்பரியத்தையும் நல்லவண்ணம் வாழும் வழியைக் காட்டும் சாதனங்களையும் அழிக்க ஆயத்தப்படுத்துகின்றார்களா?

பேராபத்து வந்து விட்டது! இந்தநெருக்கடியான நிலைமையில் என்ன செய்யப் போகின்றோம்? எங்களால் இயலாது என்று பேடித்தனமாகக் கண்மூடிக்கொண்டிருந்து பழி செய்யப் போகின்றோமா? சைவ சீலர்களே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

புதுச்சட்டத்தின்படி கல்வி அதிகாரி எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் முகாமை ஆளராக அமையப் போகின்றார்; அவ்வாறு கல்வி அதிகாரியின் ஆதிக்கத்துக்குட்பட விரும்பாத பாடசாலைகள் ஆட்சியாளருக்கு அறிவித்தபின் பெற்றார் ஆசிரியர் வாக்களிப்பின்படி மாணாக்கர்களிடம் இருந்து பள்ளிக்கூட விரயத்துக்குப் பணம் பெற்றுக்கொள்வதற்கு உத்தரவு பெறுதல் கூடும் என்று திட்டத்திலே சில புறநடை முறைகள் உண்டு.

சைவப் பண்பும் சமயப்பற்றும் விளங்கும் கல்வி முறையின்படி மாணாக்கர்கள் கற்பிக்கப்பெறல் வேண்டுமென்ற தேவைக்காக நிறுவப்பெற்ற பள்ளிக்கூடங்களைப் பெற்றார் ஒருபொழுதும் அரசினர் ஆதிக்கத்தின்கீழ் அமையவிடமாட்டார் என்ற முடிபை அந்த வாக்கு எடுத்தல் வருமுன்பு பெற்றார் கல்வி அமைச்சருக்கு அறிவிப்பதுதான் சைவ ஒழுக்கமும் கடமையுமாகும். சைவப் பள்ளிக்கூடங்களில் (அதாவது முதலாம் இரண்டாம் பிரிவில் உள்ளவைகள்) கல்வி கற்கும் மாணாக்கர்களின் பெற்றார் அத்தனைபேரும் அமைச்சருக்குத் தாமாகவே இவ்விதமாகச் சைவாபிமான எண்ணத்தை எழுத்தில் வெளிப்படுத்துவதுதான் உகந்தமுறை.

ஒட்டகம் குடிசைக்குள் நுழைந்து உரியவரையும் வெளியே ஓட்டமெடுக்கச் செய்த கதைபோலப் பள்ளிக்கூட முகாமையை முதற்கண் பெற்று ஈற்றில் முழுவதையும் அரசமயமாக்கும் அபாயத்தைக்கொண்ட சட்ட திட்டத்தைச் சைவ மக்கள் அழுத்தந் திருத்தமாக எதிர்ப்பார்கள் [illegible] தற்கையமின்று.

—

# கந்த சட்டி விரதம் காப்போம்

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

ஐப்பசி 5 உ வெள்ளிக்கிழமை (21-10-60) ஆரம்பமாகின்றது கந்தசஷ்டி விரதம். இது ஆறுநாள் விரதம். ஆறுநாளும் உபவாசம் இருத்தல் உத்தமம். அப்படி உபவாசமிருக்க இயலாதவர்கள் முதலைந்து நாளும் ஒவ்வொரு பொழுதுண்டு சட்டியிலன்று உபவாசமிருந்து அடுத்த நாள் பாராயணஞ்செய்வர்.

இவ்விரதத்தையனுட்டித்து இப்பூமியையாளும்வரத்தை அறுமுகப் பெருமானிடம் முசுகுந்தச்சக்கரவர்த்தி பெற்றாரெனக் கந்தபுராணம் கூறும். இக்கதைப் பொருளை நம்பி இவ்விரதத்தை அனுட்டித்து எவரும் அதிசயிக்கத்தக்க பெரும் நலன்களை மக்கள் பெற்று வருகிறார்களென்பது கண்கூடு. ஆகையினாலே சூரபன்மனது ஆட்சியை நினைவு கூரச்செய்யும் இக்காலத்திலே, அல்லற்கடலுள் அமிழ்ந்தி நிற்கும் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் தம்பொருட்டும் தம் இனத்தின் பொருட்டும் இவ்விரதத்தைக் கந்தசட்டிக் கவசத்தை ஓதியும், கந்தபுராண படனஞ் செய்தும் முறைப்படி அனுட்டித்துச் சுப்பிரமணியப் பெருமானுடைய திருவருளைப் பெற்று உய்தியடைய முயலுதல் முறையாகும். ஒவ்வொருவரும் இயன்றளவுக்கு முயல்வார்களாக.

"நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே".

○

உ
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினது
நிருவாகத்திலிருக்கும் கோயிலாக்கண்டிச் சிவன்கோயில்

## திருப்பணி நிதி

| | |
|---|---|
| நன்கொடைச் சீட்டு விற்று வரவு | 210 50 |
| யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் | 95 00 |
| சென்னை உயர்திரு. J. V. ஜம்புலிங்கம்பிள்ளை | 5 00 |
| | 310 50 |

## "முருக வழிபாடு"

—:—

"முருக வழிபாடு" பற்றிய கட்டுரைத்தொடர்ச்சி இடநெருக்கடியால் வெளிவரவில்லை. அடுத்த இதழில் வெளிவரும். ப—ர்.

# வித்துவசிரோமணியின் சிடன் வித்துவசிரோமணி

(முற்றொடர் - 2)

கணேசையர் ஐந்து வயது நிரம்பப்பெற்றதும் தமது பெரியதந்தையரான கதிர்காம ஐயர் அவர்களால் நிறுவப்பட்ட சைவ வித்தியாசாலையிற் கல்வி பயில ஆரம்பித்தார். கதிர்காம ஐயரிடத்து இலக்கண இலக்கியங்களையும், சமய சாஸ்திரங்களையும் கற்றார்.

### வித்துவசிரோமணி தொடர்பு

வித்தியாசாலையில் எட்டாம் வகுப்புப் படிக்கும்போது ஆசிரியர்களாக எதிர்காலத்தில் விளங்கக்கூடியவர்களைத் தெரிந்தெடுப்பதற்கான பரீட்சை நடைபெற்றது. பரீட்சை அதிகாரிகளாக வந்தவர்களில் நாவலர் பெருமானின் மருகரும், மாணாக்கருமாகிய வித்துவ சிரோமணி திரு ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களும் ஒருவர். பரீட்சை முடிந்தபின் பிள்ளை அவர்கள் மாணாக்கர்களுக்குச் சில அறிவுரைகள் கூறினர்.

பொன்னம்பலபிள்ளை அவர்களின் தமிழ்ப்புலமையைக்கண்டுகாதல்கொண்ட கணேசையர் அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பிள்ளை அவர்களிடம் கற்றுணர வேட்கை கொண்டார். தம்மை மாணவராகச் சேர்த்துக் கொள்ளும்படி வேண்ட பிள்ளை அவர்கள் அதற்கிசைந்தனர்.

திரு. பொன்னம்பலபிள்ளையவர்களின் திண்ணைப் பள்ளிக்கூடம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் வடக்கு வீதியில் அமைந்திருந்தது. அக்காலத்திலே தற்போது போன்று போக்கு வரவு வசதிகள் இல்லை. புன்னாலைக்கட்டுவனிலிருந்து வண்ணார்பண்ணைக்குத் தினமும் போய்வருவது கடினம்.

கணேசையர் அவர்களுக்கு வசதியளிப்பதாக, அவரின் சகோதரி கணவன் இல்லம் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு எதிராக அமைந்திருந்தது. அங்கு தங்கியிருந்து திண்ணைப்பள்ளிக்கூடத்தில் நிகண்டு, தொல்காப்பியம் போன்ற இலக்கண இலக்கியங்களைக் கற்றார். இவ்விதமாகச் சில மாதங்கள் கழிந்தபின் புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் ஆலயப் பூசையையும் இவர் நடாத்தவேண்டியிருந்தது. இரவுப் பூசையை முடித்துக்கொண்டு வண்ணார்பண்ணைக்குச் செல்லும் வழமையைக் கைக்கொண்டார் இக்காலத்திலேதான் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம் என்பன படிக்கப்பட்டன, வித்துவசிரோமணியே இவற்றுக்குப் பொருள்சொல்லி வந்தார். இப்புராண படனத்தை ஐயர் அவர்கள் கேட்டு வந்தமையால் அம்மூன்றிலும் நல்ல ஆட்சியுடையவராக விளங்கினர். கணேசையர் அவர்கள் தாம் எழுதியுள்ள 'ஈழமண்டலப் புலவர் சரிதத்தில்' பொன்னம்பலபிள்ளை அவர்களின் பொருள் சொல்லுந் திறனைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

ஸ்ரீ. இ. சுந்தரராஜ சர்மா

"பொருள்சொல்லுங்கால் 'யாழிசையோ, பாரதிதன் னின்னிசையோ' என்று அயிர்க்குமாறு தமக்கு இயற்கையாய் அமைந்த இனிய மிடற்றோசையோடும், விரிவுரையோடும் சொல்லின்பமும், பொருளின்பமும் தோன்றச் சொல்வர். இவர் சொல்லும் பொருளிலே பரிமேலழகர், நச்சினார்க்கினியர் பேராசிரியர் முதலியோர் உரைத்த உரைத் திறங்களெல்லாம் அமைந்திருக்கும்".

இத்தகைய சிறப்பு வாய்ந்த வித்துவ சிரோமணி திரு. ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள், தமது ஆசானும் மாமனுருமாகிய நாவலர் அவர்களின் ஞான பரம்பரை வளர்ந்து பயன் தருவதற்குக் கணேசையரைப் பொறுப்பாக நியமித்து 1897-ம் ஆண்டு விண்ணுலகெய்தினர்.

(வளரும்)

## அணிந்துரை அரங்கம்

### கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரிகள்

ஆசிரியர்: வெள்ளவத்தை
மு. இராமலிங்கம்

பிரதி விலை ரூபா: 1-00.

ஆசிரியரின் நீண்டகால முயற்சியின் பயனாகிய இவ்வெளியீடு பிற்கால ஆராய்ச்சியாளருக்குப் பேருதவிபுரியத்தக்கதாகும், பலவிதமான சிறந்த ஒப்பாரிகளுள்ள இவ்வெளியீட்டைக்கண்டு பெண்மணிகள் பெரு மகிழ்வெய்துவர். ஆடவரே விரும்பிப்பார்க்கத்தக்கது. பாராட்டுக்குரியதாகிய இவ்வெளியீட்டை வரவேற்று ஆசிரியரை ஊக்குவித்தல் தமிழ்ச் சமுகத்தின் கடனாகும். ——

### பள்ளிக்கூடங்களை எடுக்கும் திட்டத்தின் பகுதி 2

இப்பொழுது கொண்டுவரப்பெற்ற பள்ளிக்கூடத் திட்டத்தின் இரண்டாம் பகுதி அடுத்த தை மாதம் கல்வி மந்திரியாராலேயே சமர்ப்பிக்கப்படுமென்று அம்மந்திரியாரே அறிவித்திருக்கின்றார்.

### மந்திரிமார் வந்தார்கள்

சேமிப்புவாரம் கலாமன்றம் என்றவை சார்பாக மூன்று மந்திரிமார் யாழ்ப்பாணத்திற் சமுகமாயிருக்கின்றனர். உள்நாட்டு மந்திரி, நிதிமந்திரி, போக்குவரத்து மந்திரி ஆகிய மூவரும் இவ்விழாக்களை ஒழுங்குபடுத்தியவர்களால் வரவேற்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை சிறந்த உரை ஆசிரியர் சபாபதி நாவலர்


—:0:—

## சமயத்துக்கும் கல்விக்கும் இருப்பிடமாய் விளங்கியவர்

(முற்றொடர் -)

இரண்டாம் நாள் விழா 6-10-60 வியாழக்கிழமை திருவாவடுதுறை ஆதீனமகா வித்துவானும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளருமாகிய உயர்திரு ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள் தமது முன்னுரையில் கல்வி அரசினரிடம் ஒப்படைக்கப்பட்டால் அது குரங்கின் கைப் பூமாலையாகி விடுமெனவும் அது மதசம்பந்தமாக விருந்தாற்றான் மாணவருக்கு நன்மை பயக்குமெனவும் இறைவழிபாடில்லாத கல்வி உயிரற்றதாகி விடுமெனவும் கூறினார். ஒரு நூலுக்கு உரை யெழுதுவது இலகுவானகாரியமல்லவெனவும் பெரிய கருத்துக்களை நூலாசிரியர் சுருக்கமாகச் சொல்லியிருக்க உரை யெழுதுகின்றவர் ஆசிரியருடைய உள்ளக் கருத்தை உய்த்துணர்ந்து செய்யுட்களின் முடிச்சை யவிழ்த்து உரையெழுத வேண்டுமெனவும் அம்முறையாக நூல்களுக்கு உரை கூறுவதில் சபாபதி நாவலர் தலை சிறந்தவரெனவும் வடமொழி நூல்களை மொழிபெயர்த்தலிலும் சபாபதி நாவலர் தலைசிறந்தவரெனவும் வேதம் அநாதி நித்தியமாயுள்ளதெனவும் அது சைவத்தை நடத்துவது எனவும் 'திரயி' என்பது இருக்கு சாமம் அதர்வம் என்பவற்றைக் குறிப்பதெனவும் வேதத்தைக் கற்றுணர்ந்த அரதத்தசிவாச்சாரியார் சுருதி சூக்தமாலை என்னும் நூலை வடமொழியில் செய்தாரெனவும் அதன் தாற்பரியத்தை சதுர்வேத தாற்பரிசங்கிரகம் என்னும் நூலாக சபாபதி நாவலர் இயற்றினாரெனவும் சிவனே பரமபொருள் என்று அதிற் கூறப்பட்டிருக்கின்றதெனவும் கூறினார்கள்.

பின்பு பண்டிதை திருமதி. ச. அமிர்தாம்பிகை அவர்கள் B.A. (Hons) சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு அரிய சொற்பொழிவாற்றினார். சபாபதி நாவலர் கற்றுணர்ந்த வண்ணம் ஒழுகிய பெரியாரெனவும் சிறு வயதில் அவரை ஒரு குன்மநோய் பீடித்தபொழுது நல்லை முருகன் சந்நிதானத்தில் தவஞ் செய்து முருகப்பெருமான் மீது ஒரு தோத்திரப்பாமாலை பாடி அந்நோயை மாற்றிக் கொண்டாரெனவும் கூறினார். சபாபதிநாவலர் அவர்கள் பின்பு இந்தியாவுக்குச் சென்று தமிழ்த் தொண்டு புரிந்தாரெனவும் சதுர்வேத தாற்பரியம் அவரால் அரதத்தசிவாச்சாரியருடைய 'சுருதிசூக்தமாலை' வடமொழி நூலை மொழிபெயர்த்துச் செய்யப்பட்டதெனவும் 'தத்துவம் அசி' என்ற மகா வாக்கியத்துக்கு 'அது நீ ஆகிறாய்' என்ற கருத்தைக்கொள்வதே சிறந்ததெனவும் கூறினார். பின்பு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் சபாபதி நாவலரவர்கள் உலகத்தோடொட்ட ஒழுகலை அறிந்தவரெனவும் அவர் கல்வி சமயம் இரண்டுக்குமிருப்பிடமென்வும் சபாபதி நாவலர் வாழ்ந்த காலத்தில் ஆறுமுகநாவலர், வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை, மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சங்கரபண்டிதர் ம. க. வேற்பிள்ளை ஆகிய புலவர்கள் வாழ்ந்தார்களெனவும், அவர்களுடைய சேர்க்கையினால் சபாபதி நாவலருடைய கல்வியறிவு மிகத் தேர்ச்சி அடைந்திருக்கக் கூடுமெனவும், இக்காலத்தில் ஆசிரியரில்லாமற் பண்டிதர்களாகின்றவர்களுடைய வகுப்பைச் சபாபதி நாவலர் சேர்ந்தவரல்லரெனவும் திருவாவடுதுறை ஆதீனத்தில் 16வது சந்நிதானமாகக் கடமையாற்றிய ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணிய தேசிகர் தகுதியான மாணவர்களைக் கண்டு பிடிப்பதில் நிபுணரெனவும் சபாபதிநாவலரை அவர் ஆதீன வித்துவானாகத் தேர்ந்தெடுத்ததிலிருந்து அவருடைய திறமை விளங்குகின்றதெனவும் கூறினார் சபாபதி நாவலர் அவர்கள் இயற்றிய நூல்களை அச்சிட்டுத் தமிழ்மக்களுக்கு வழங்குவதே இந்தக் கோப்பாய் வடக்கு பாலர் ஞானோதய சங்கத்தின் முக்கிய கடமையாகும் எனவும் மேலும் பேசும்போது கூறினார். பரிசில்கள் வழங்கப்பெற்றபின் நன்றிகூறுதலுடன் விழா நிறைவெய்தியது,




சங்கானை
அரசடி வயிரவர் கோவில்
### தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவண அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றேம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

மாவிட்டபுரம்
வயித்திலிங்கம் சரவணமுத்து (யாழ்ப்பாணம் டிஸ்திக்கோட்டின் தத்துவ வழக்கு இல. N, 506 லுள்ள யோகம்மாளின் ஆதனத்துக்கு தாஞகவும் தத்துவகாரர்) வழக்காளி.
வழக்கு இல. M. B. 2916.
எதிராக
மாவிட்டபுரம்
1. மருதி முருகன்
2. முருகன் பெண்தெய்வானை
எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 2916ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1960 ம் வருடம் கார்த்திகை மாதம் 8-ந் திகதி (8-11-60) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1416-ம், 10-7-59 தொடககம் 16-11-59 வரைக்கும் ரூபா 1000-க்கு 10 வீத வட்டியும், அதன் பின் முழுத்தீர்வைததொகைக்கும் பணம் முற்றுக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 205-22 சதமும்,

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதிதெல்லிப்பளைகோயிற்பற்று மாவிட்டபுரம்இறை"செம்பிசீமா' (sempiseems) நிலப்பரப்பு $4\frac{3}{4}$. பளைகளும் எல்லை கிழக்கு, தம்பு நாகேந்திரத்தின் ஆதனம். வடக்கும், மேற்கும் ஒழுங்கை. தெற்கு சரவணமுத்து கனகரத்தினத்தின் ஆதனம். இதடங்கலும்,

செ. பாண்டித்துரை
கோட்டுக்கும் விற்பனவாளரும்
Commissioner of Sales & Valuer
மல்லாகம், 29-9-60.
(M. 129 21-10-60)

### ஏந்திர கைத்தொழிற் சமாசம் வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புருெஜெக்ரேஸ்) முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின் சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 22-10-60—28-10-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபங்கள் இந்தவாரம் நிச்சயம். ஆனால் குடும்பக் கருமங்கள் குழப்பமாயிருக்கும். தேக சுகமும் திருத்தியீனமாயிருக்கும். முதல்இருநாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருக சீரிடம், 1, 2-ம் பாதம்,

நண்பர்கள் இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக்குஇடமுண்டு. வாகனங்கள் அதிக செலவையும் கோபத்தையும் உமக்கு உண்டாக்கும். திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

தேகசுகம் அதிகம் திருத்தியாயிராது. உமது மனம் அமைதியாயிருக்கமாட்டாது. புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கவனமாய்க் கழிக்கவேண்டும், வார மிகுதி பணத்துறைக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

பகைவர் அழிவுக்கிடமுண்டு. பணத்துறையிலும் நல்ல வாரம். ஆனல் குடும்பச்சூழலில் சில சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. வெள்ளி பிற்பகலும் சனியும் கவனமாய்க்கழிக்க வேண்டும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்ப நிலைமைகள் இந்த வாரம் சிறிதும் திருத்தியாயிருக்கமாட்டா. வேலையும் வழக்கத்திலும் கூடுதலாயிருக்கும், ஆனல் போதிய பதிலுபகாரம் பெறுவீர். காணிகள்மூலம் இலாபங்களும் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இளைய சகோதர சகோதரிகள் இந்தவாரம் அதிக உதவியாயிருப்பர். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. புகழும் சமுக சித்தியும் நிச்சயம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இந்த வாரம் சிறு சுகவீனங்களுக் கிடமுண்டு. பிதாவழி இனத்தவர் உமக்குச் சில தொந்தரவுகளை உண்டாக்ககூடும், ஆனல் பணத்துறையில் நல்ல வாரம். கமத்தொழில் முயற்சிகள் நல்ல பலனைத்தரும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

நீர் இந்த வாரம் கருமங்களைச் செய்விக்ககூடியதாயிருக்கும். தனலாபங்களும், புகழும் நிச்சயம். ஆனல் மனச்சமாதானமிருககமாட்டாது. சிறு சுகவீனங்களுக்கும் இடமுண்டு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

எந்தப்பக்கமாயும் கருமங்களை நிச்சயிக்க முடியாது இந்த வாரம் வருத்தப்படுவீர், பிதாவழி இனத்தவர் உமக்கு அதிக கோபத்தையும் செலவையும் உண்டாக்குவர். ஆனல் பணத்துறையில் ஒரு அளவுகளு நல்ல வாரம்,

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உம்முடைய பழைய முதலீடுகள் தொடர்ந்து இந்த வாரம் நல்ல பலனைத்தரும். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. ஆனல் மனச்சமாதானமிருக்கமாட்டாது. சுகவீனங்களுக்கிடமுண்டு,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக் கருமங்கள் இந்த வாரம் குழப்பமாயிருக்கும். உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. சுகவீனங்களுக்கும் இடமுண்டு. பணத்துறையில் ஒரு நல்லவாரம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. தேகசுகம் அதிகம் திருத்தியாயிராது. ஆனல் உத்தியோக சித்தி நிச்சயம். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு.

### யாழ். இசைக்கலை நாடக சபா

—0—

அகில இலங்கைப் பொதுசன சேவைச்சங்க ஆதரவில் சென்ற15-10-60சனிக்கிழமை மாலை மேற்படி நாடகசபாவின் அங்குரார்ப்பணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திரு. சி. கந்தையர் தலைவராகவும் ம. தேவேஸ்வரன் காரியதரிசியாகவும், திரு. சி. சிவானந்தன் தனாதிகாரியாகவும் இன்னும் பன்னிருவரை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

### தொண்டர் படை

அகில இலங்கைப் பொதுசன சேவைச்சங்கம் அமைத்த தொண்டர் படையினர் செய்யும் சேவை 16-10-60 ல் நடந்த குறித்த சங்கநிருவாக சபைக கூட்டத்திற் பாராட்டப்பட்டது. குறித்த தொண்டர்படையைப் பருப்பிக்கும் நோக்கமாக 23-10-60 ல் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Commission Sale
### பாட்டிசன் சட்டப்படி
### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திரிக்கோட்டில்
வழக்கு இல. 5956

1, அல்வாய் மேற்கு வேலாயுதர் பெரியதம்பி
2. பெண் சின்னப்பிள்ளை
—வழக்காளிகள்,

எதிராக

1, அல்வாய் மேற்கு சிங்கர் சிதம்பரப்பிள்ளை
2. ஷெயூர் சிதம்பரப்பிள்ளை முருகுப்பிள்ளை
3. அல்வாய் வடக்கு கணபதிப்பிள்ளை இராமலிங்கம்
4. அல்வாய் மேற்கு வல்லிபுரம் கந்தையா கணபதிப்பிள்ளை
5. ஷெயூர் முருகுப்பிள்ளை சிவலிங்கம்
6. ஷெயூர் வல்லிபுரம் கதிர்காமு
7, ஷெயூர் கோணமலை இராசையா
8, பெண் வள்ளிப்பிள்ளை
9. ஷெயூர் கதிர்காமர் மாணிக்கம்
10. ஷெயூர் சுப்பையா கதிர்காமத்தம்பி
11. ஷெயூர் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
12. ஷெயூர் பெரியதம்பி கந்தவனம்
13, பெண் வள்ளிப்பிள்ளை
14. ஷெயூர் கந்தவனம் ஆறுமுகம் —எதிரிகள்.

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1960-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 12-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்களிடமாகநின்று முதலாவது பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத்தவறினால் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் மழவராயர் குறிச்சியிறை "உந்தோடை". இதற்கு 1960-ம் ஆண்டு ஆடிமாதம் 10-ந் திகதி உலாந்தா மேஸ்தர் தா. சுப்பிரமணியம் அவர்களால் 2137-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 5 குளி5 27/32 இதில் குறித்த படத்தில்

1. 1-ம் நம்பர் துண்டுக்கு நிலப்பரப்பு 1 குளி 12 9/16 அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2-ம் நம்பர் துண்டு, வடக்கு K.கந்தவனத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கைகள் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும். இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூபா 630-12, சதம்.

2. 2-ம் நம்பர் துண்டுக்குக் குளி 14 5/32 அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு குறித்த படத்தில் 3-ம் நம்பர் துண்டு வடக்கு K. கந்தவனத்துக்கும் மறுபேருக்கு முடைய வாதனம், மேற்கு குறித்த படத்தில் 1-ம் நம்பர் துண்டு, தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக் குட் பட்டவைகள் முழுவதும் இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 526-50 சதம்.

3, 3-ம் நம்பர் துண்டுக்கு நிலப்பரப்பு 2 குளி 15½ கட்டிடங்களும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு பெ. சுந்தரலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு K. கந்தவனத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு மேலே சொல்லப்பட்ட 2-ம் நம்பர் துண்டு, தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும் இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா. 2589-00.

V M. KANDASAMY
Commissioner of sales
வல்வெட்டித்துறை,
6-10-60.
M 130 21-10-60,

## பாட்டிஷன்சட்டப்படி
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்கு

வழக்காளி
1, ஆறுமுகம் முருகுப்பிள்ளை,
2, பெண் சின்னத்தங்கம்
அல்வாய் மேற்கு.

வழக்கு இலக்கம்: 6242.

எதிராக:

1. ஆறுமுகம் பொன்னையா
2. பெண் செல்லம்மா
3. M. கோணமலை இராசையா
4. பெண் வள்ளிப்பிள்ளை
5. R. திருனவகரசு
6. பெண் சின்னப்பிள்ளை
7. வல்லிபுரம் கதிர்காமர்
8. முருகுப்பிள்ளை சிவாலிங்கம்
9. சிங்கர் சிதம்பரப்பிள்ளை
10. பொன்னையா
ஆள்வாப்பிள்ளை
11, P, ஆறுமுகம் கைம்பெண்
சின்னச்சி
12, கந்தையா கணபதிப்பிள்ளை
13, சின்னதம்பி இராசு
14, பெண் சின்னப்பிள்ளை
15, இராமலிங்கம் துரைராசா
16. பெண் வயிராத்தை
17. இராமலிக்கம் சச்சிதானந்தம்
18. பெண் பாறுபதி
19. ஆள்வார் கணபதிப்பிள்ளை
20. பெண் தெய்வானை
21. V. கதிரித்தம்பி
22. பெண் சின்னத்தங்கம்
23, கந்தையா வயிரமுத்து
24. K. தம்பையா
25. பெண் சின்னம்மா
26. கந்தையா தம்பையா
27, பெண் வள்ளிமுத்து
28. K. சந்திரசேகரம்
29. பெண் இராசம்மா
30, K. முருகுப்பிள்ளை
கைம்பெண் பாறுபதி
31, P. நடேசு
32. பெண் செல்லம்மா
33. கணபதியார் கந்தையா
34. வள்ளியார் ஆறுமுகம்
35. ஆறுமுகம் கிட்டிணபிள்ளை
36. C. குருசுப்பிள்ளை, எல்லோரும் அல்வாய் மேற்கு.
37. நாகப்பர் செல்லையா
புலோலி மேற்கு
38. கதிர்காமர் மாணிக்கம்
39, V. கணபதிப்பிள்ளை வல்லிபுரம் எல்லோரும் அல்வாய் மேற்கு. —எதிரிகள்.

மேற்குறித்த இலக்கப் பாட்டிஷன் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் அக்கோட்டால் அனுமதிக்கப்பட்ட விற்பனை நிபந்தனைகளின்படியும் அவ் வழக்கில் கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட அதிகாரப்பத்திரத்தின்படியும், உலாந்தா மேஸ்தர் V. சிவரத்தினம் அவர்களால் 1960-ம் ஆண்டு ஆனி மாசம் 6-ந் தேதி, 2058-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம் துண்டுகளாக காட்டப்பட்டும், பின்னால் காணும் டாப்பில் விபரிக்கப்பட்டுமிருக்கு மாதனங்கள் 1960-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 14-ம் தேதி (14-11-60) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களினிடமாகவிருந்து முதலாவதாக ஒவ்வொரு துண்டுக்கும் கோட்டால் அனுமதிக்கப்பட்ட மதிப்பிற்குக் குறையாத விலைக்குப் பங்காளிகளுக்குள்ளும் அவ்விதம் பங்காளிகள் அம்மதிப்புக்குக் குறையாத விலைக்கு வாங்கத் தவறின் உடனேயே பிரசித்த ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சி "தொறுக்கோணவலை" நிலப்பரபு 32, 7/8. தோட்ட 2, இது உலாந்தா மேஸ்தர் V. சிவரத்தினம் அவர்களால் 1960-ம் ஆண்டு ஆனி 6-ம் தேதி, 2058-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி அளந்து கண்ட நிலப்பரப்பு 27, குளி 15 13/32. ஷெ படத்தில் 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம் துண்டுகளாக்கப்பட்டிருக்கின்றது. இதில்,

1. ஓராம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2, குளி 12. எல்லை கிழக்கு T. கதிர்காமுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு ரோட்டு. மேற்கு பொது வழிப் பாவிப்புக்காக விடப்பட்ட 14-ம் நம்பர் துண்டு. தெற்கு மேற்கூறிய படத்தின் இரண்டாம் நம்பர் துண்டு. மேற்கூறிய படத்தின்படி 11-ம், 12-ம், 13-ம், 14-ம், 15-ம், 16-ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதை நிலங்களில் இதற்கு பங்கும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 800/-

2. இரண்டாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2, குளி 12. எல்லை கிழக்கு T. கதிர்காமுவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். வடக்கு மேற்கூறிய படத்தின் ஓராம் நம்பர் துண்டு, மேற்கு மேற்கூறிய படத்தின் 14-ம் நம்பர் துண்டு. தெற்கு மேற்கூறிய படத்தின் 3-ம் நம்பர் துண்டு. மேற்கூறிய படத்தின்படி 11-ம், 12-ம், 13-ம், 14-ம், 15-ம், 16-ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதை நிலங்களில் இதற்கு பங்கும், இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா. 1133/32,

3. மூன்றும் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2, குளி 12. எல்லை கிழக்கு T. கதிர்காமுவுக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். வடக்கு மேற்கூறிய படத்தின் 2-ம் நம்பர் துண்டு. மேற்கு மேற்கூறிய படத்தின் 14-ம், 15-ம், நம்பர் துண்டுகள், தெற்கு மேற்கூறிய படத்தின் 4-ம் நம்பர் துண்டு. மேற்கூறிய படத்தின்படி 11ம், 12ம், 13ம், 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதை நிலங்களில் இதற்கு பங்கும், இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 2666/66.

4. நாலாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2, குளி 12, எல்லை கிழக்கு T. கதிர்காமுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு மேற்கூறிய படத்தின் 3-ம் நம்பர் துண்டு. மேற்கு மேற்கூறிய படத்தின் 14-ம் நம்பர் துண்டு தெற்கு மேற்கூறிய படத்தின் 5-ம் நம்பர் துண்டு. மேற்கூறிய படத்தின்படி 11ம், 12ம், 13ம், 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதை நிலங்களில் இதற்குப் பங்கும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3466/66.

5. ஐந்தாம் துண்டுக்குரிய நிலைப்பரப்பு 2 குளி 12. எல்லை கிழக்கு T. கதிர்காமுவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். வடக்கு மேற்கூறிய படத்தின் 4 ம் நம்பர் துண்டு. தெற்கு துரைராசாவின் பெண் வயிராத்தைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு மேற்கூறிய படத்தின் 14 ம் நம்பர் துண்டு. மேற்கூறிய படத்தின்படி 11ம், 12ம், 13ம், 14ம், 15ம், 16ம், துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புகாக விடப்பட்ட பாதை நிலங்களில் இற்குப் பங்கும். இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3466-66.

6. ஆறும் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2 குளி 12. எல்லைகிழக்கு மேற்கூறிய படத்தின் 14 ம் நம்பர் துண்டு. வடக்கு மேற்கூறிய படதின் 16 ம் நம்பர் துண்டு. மேற்கு மேற்கூறிய படத்தின் 13ம் நம்பர் துண்டுவும் கணபதிப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுடையஆதனம். தெற்கு வயிராத்தைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கூறிய படத்தின்படி 11ம், 12ம், 13ம். 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட பாதை நிலங்களில் இதற்கு பங்கும். இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3240.

7. ஏழாம்துண்டுக்குரிய நிலைப்பரப்பு 2 குளி 12, எல்லைகிழக்கு மேற்கூறிய படத்தின் 14 ம் நம்பர்துண்டு. வடக்கு மேற்கூறிய படத்தின் 8 ம் நம்பர் துண்டு. மேற்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் மறு பேருக்குமுடைய ஆதனம். தெற்கு மேற்கூறிய படத்தின் 16 ம் நம்பர் துண்டு. மேற்கூறியபடத்தின்படி 11ம், 12ம், 13ம், 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதைநிலங்களில் இதற்கு பங்கும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3200

8. எட்டாம் துண்டுக்குரிய நிலைப்பரப்பு 2 குளி 12 எல்லை கிழக்கு மேற்கூறிய படத்தின் 14 ம் நம்பர்துண்டு. வடக்கு மேற்கூறியபடத்தின் 9ம் நம்பர்துண்டு. மேற்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் மறு பேருக்குமுடைய ஆதனம் தெற்கு மேற்கூறிய படத்தின் 7 ம் நம்பர் துண்டு மேற்கூறியபடத்தின்படி 11ம், 12ம், 13ம். 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதை நிலங்களில் இதற்கு பங்கும், இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 2460,

9. ஒன்பதாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2 குளி 12. எல்லை கிழக்கு மேற்கூறிய படத்தின் 14 ம் நம்பர் துண்டு, வடக்கு மேற்கூறிய படத்தின் 10 ம் நம்பர் துண்டு. மேற்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுடையஆதனம் தெற்கு மேற்கூறிய படத்தின் 8ம் நம்பர் துண்டு. மேற்கூறிய படத்தின்படி 11ம், 12ம், 13ம், 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காகவிடப்பட்ட பாதை நிலங்களில் இதற்கு பங்கும், இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்புரூபா 1166-66.

10. பத்தாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 2, குளி 12 எல்லை கிழக்கு மேற்கூறிய படத்தின் 14 ம் துண்டுவும், 11ம் துண்டும் வடக்கு ரோட்டு மேற்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு மேற்கூறிய படத்தின் 9 ம் நம்பர் துண்டு, மேற்கூறிய படத்தில் a, b, என்று குறிக்கப்பட்ட கட்டிடங்கள் பிறநீங்கல், மேற்கூறிய படத்தின்படி 11ம், 12ம், 13ம், 14ம், 15ம், 16ம் துண்டுகளிலுள்ள பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பாதை நிலங்களில் இதற்குப் பங்கும். இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3300.

கா. முத்துக்குமாரு ஐயர்

கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales& Valuer,
சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 13-10-1960,
M 131 21-10-60.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14



நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி

# தங்கபஸ்பம்

உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம், இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

**தாளக பஸ்பம்** ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனம்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி SI.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீம சங்கர தலமகிமை

வட இந்திய நாட்டிலுள்ள ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் ஒன்றாகவுள்ள பீமசங்காரம் (டாகின்யாம் பீமசங்கரம்) காட்டின் மத்தியபாகத்திலுள்ளது. ஆலயம் இப்பொழுது சிறிது சிதைந்து உள்ளது, மேற்படி ஆலயத்தில் நந்திதேவர் இருவர் உள்ளனர்; ஒன்று பழமையானது, மற்றொன்று புதிது. பீமாநதி அருகில் ஓடுகின்றது. பீமசங்கரருடைய லிங்கம் ஒருமுழம் உயரமானது. இவ்விலிங்கத்திற்குப் பீமேசலிங்கம் உபலிங்கமாகும்,

இந்த க்ஷேத்திரம் பூனாவிலிருந்து 57 மைலிலும், பம்பாய் நகரத்திலிருந்து 62மைலிலும் உள்ளது.

புராண வரலாறு

கும்பகர்ணனுக்கும் கற்கடி என்ற ராக்ஷிசிக்கும் பிறந்தவன் பீமன் என்ற அசுரன்; தன்னுடைய மாதாமகர் (பாட்டன்) சுதீக்ஷணர் என்ற முனிவரால் கொல்லப்பட்டார் என்பதையும், தன் தந்தையாகிய கும்பகர்ணனும் இராவணனும் இராமனால் கொல்லப்பட்டனர் என்பதையும் அறிந்தான்; மிகவும் கோபங்கொண்டு, பிராமணர்களையும் அரசர்களையும் அழிக்க வேண்டும் என்று எண்ணிப் பிரமனை நோக்கிக் கடுந்தவம் செய்தான்; தவத்தின் பயனாக பிரமதேவரிடமிருந்து ஒப்பற்ற பலத்தை வரமாகப்பெற்றான். அந்தப் பலத்தைக்கொண்டு அரசர்களைத் துன்புறுத்தினான்.

காமரூப தேசத்து அரசனை பிரியதர்மனைச் சிறையிலடைத்தான்; அவனுடைய படைகளையும் நாட்டையும் தன் வசப்படுத்திக் கொண்டான். மக்களையும் தேவர்களையும் துன்புறுத்தியும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரியதர்மனும் அவன் மனைவி தக்ஷிணாதேவியும் சிறந்த சிவபக்தர்களாதலின் நாள்தோறும் சிறையில் சிவபூசை செய்து வந்தனர். தேவர்கள் பீமனுக்குப் பயந்து மாகோசி நதிக்கரையில் மறைவாக இருந்து தவம் செய்துவந்தார்கள்.

நீண்ட நாள் சென்றபின்னர் சிறையில் அரசன் பிரியதர்மன் சிவபூசை செய்து கொண்டு தியானத்திலிருந்து வருவதைக்கண்ட காவலன் அவைகளையெல்லாம் நிறுத்திவிட வேண்டுமென்று அரனிடம் தெரிவித்தான். அரசன் நிறுத்த மறுத்தான். காவலன் தன் தலைவனான பீமனிடம் சிறையில் நடப்பனவற்றைத் தெரிவித்தான். பீமாசுரன் சிறைச்சாலையில் சிவபெருமானிடம வரம் பெற்று, தன்னைக் கொல்லக்கூடும் என்று பயந்து சிவபூசை செய்து வருவதை நிறுத்த வேண்டுமென்று அரசனுக்குக் கட்டளை பிறப்பித்தான். அரசன் பிரியதர்மன் என் உயிர் போனாலும் சரி சிவபூசை செய்து வருவதை நிறுத்தேன் என்று பதில் தெரிவித்தான்; கோபமடைந்த பீமாசுரன் அரசனைக்கொல்ல வாளை வீசினான்; அப்பொழுது தேவர்களின் தவத்தாலும், அரசனுடைய சிவபூசையாலும் கருணை கொண்டுள்ள பரமேஸ்வரன் அரசன் மண்ணால் செய்து பூசித்து வந்த (பார்த்திவ லிங்கத்தினின்றும்) லிங்கத்தினின்றும் தோன்றிப் பீமாசுரனுடன் போரிட்டு ஹூங்காரத்தினால் அவனை வீழ்த்தினார்; அதன்பின் தேவர்கள் அரசர் மற்றும் குடிமக்கள் எல்லோருடைய வேண்டுகோளுக்கும் இணங்கி அனுக்கிரக மூர்த்தியாக இங்கு எழுந்தருளியுள்ளார். ஆகவே பீமாசுரனைக்கொன்று உலகத்திற்கெல்லாம் க்ஷேமத்தை உண்டு பண்ணியதால் பீமசங்கரர் என்ற பெயருடன் இங்கு பரமேஸ்வரன் விளக்கிவருகின்றார்.

—தொடரும்.

(திரு. மா. பா. தினமணி கிருபர்)

## கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சைவ வித்தியாசாலை பரிசளிப்பு விழா

15 - 10 - 60 சனிக்கிழமை இரவு மேற்படி விழா, இராமகிருஷ்ண சங்கத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் உயர் திரு. சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தேவாரம், வரவேற்புரை ஆகியவற்றின்பின் தலைமையாசிரியர் ஸ்ரீமான். இ.கந்தையா அவர்களால் வித்தியாசாலை ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது.

தலைவர் சுவாமியவர்கள் கொக்குவில் பாடசாலையை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி, இந்தவிதமான ஒரு கல்விச் சாலையை அரசாங்கத்திடம் கொடுக்கும்போது பலவிதமான வசதிகளும் நிரம்பிய ரூபவதியான ஒரு இளம் கன்னிப்பெண்ணை விவாகஞ் செய்துவைக்கும் பெற்றோரின் மன நிலையில் தாம் இருப்பதாகக் கூறி, எதிர்காலம சீரும், சிறப்பும் பெற்று வாழ இறைவன் கருணையை வேண்டுவதாகக் கூறினர். பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் அரிய புத்திமதிகளையும் கூறியருளினர்.

அதற்கடுத்துச் சொற்பொழிவாற்றிய தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள், மகாபாரதத்திலிருந்து கதை சொல்லிக் குழந்தைகளையும், பெரியோர்களையும் மகிழ்வித்து, திரௌபதியைச் துச்சாதனன் துகிலுரிந்தபோது ஒரு கையால் புடவையைப் பிடித்துக்கொண்டு, ஒரு கையால் அண்ணலை அழைத்தபோது அவர் வராமை கண்டு புடவைக் கையைவிட்டு அவனே தஞ்சமென நின்றபோது அண்ணல் கருணைபுரிந்தமையை அழகாகச் சித்திரித்துக்காட்டினர். அவ்விதமே எவ்விதமான கஷ்டங்கள் வந்தபோதும் இறைவனைத் தஞ்சமென முழு மனத்துடன் நம்பி நாம் நின்றால் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லையென்று தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டார். ஸ்ரீமான் எஸ். அம்பிகைபாகனவர்கள் குறிப்புரை கூறினர்கள்.

—

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு

———0———

தமிழ்மறைக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு 1961-இல் "யூன்" மாதம் மூன்றாம் சனிக்கிழமை நடைபெறும் எனவும் 1—12—60 க்கு முன் தேர்வுக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டுமெனவும் தமிழ்மறைக் கழகம் வெளியிட்ட அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிற செய்திகளாவன:

தேர்வுப் பிரிவுகள்

தொடக்கப்பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாகத் தேர்வு நடைபெறும். தொடக்கப் பிரிவுக்கு 10 வயதுக்கு மேற்படாதவர்களும் கீழ்ப்பிரிவுக்கு 15 வயதுக்கு மேற்படாதவர்களும் தோன்றலாம் மேற்பிரிவுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.

தொடக்கப் பிரிவுக்குத் திருக்குறளில் முதற் 15 அதிகாரங்களும், கீழ்ப் பிரிவுக்கு அறத்துப் பாலும், மத்தியபிரிவுக்கு அறத்துப் பாலும், பொருட்பாலும், மேற்பிரிவுக்குத் திருக்குறள் முழுவதும் தேர்வுக்குரிய பாடப்பகுதிகளாகும்.

17 பதக்கப் பரிசுகள்

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கமும் இரண்டாம் மூன்றும் நாலாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும். தொடக்கப் பிரிவுக்குத் தோற்றுபவர்களுள் 50 சத வீதத்துக்குக் குறையாமற் புள்ளிபெறும் மிகக் குறைந்த வயதுடையவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கமும் உண்டு. புத்தகப் பரிசில்கள் பல உள. 50 சத வீதத்துக்குக் குறையாமற் புள்ளிபெறும் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். விபரங்களுக்குத் தமிழ் மறைக் கழகம், 50, [illegible] ஒழுங்கை, [illegible] முகவரிக்கு எழுதுக.

### திருவாவடுதுறை ஆதீனத்தின் இருவெளியீடு மலர்கள்

=0=

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமானின் புரட்டாசி மகாபிஷேகத்தை முன்னிட்டு 3.10-60 அன்று கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் அருளிச்செய்துள்ள "சிவப் பிரகாசம்" நூலின் சீர்மைக் கட்டுரை மங்கல வாழ்த்துப் பகுதியை 192 பக்கங்கள் அச்சிட்டு ஆதீனத்தின் 143-வது வெளியீட்டு மலராக வெளியிட்டுள்ளார்கள்.

(திரு. மா. பா. தினமணிகிருபர்)

நேயர்கள் நெஞ்சம்

## ஆரியர்

—0—

ஐயா,

ஆரியரைப்பற்றிய கட்டுரை மகிழ்சிக்குரியது. வடமொழியும் தென்மொழியும், ஆரியமும் திராவிடமும், சம்ஸ்கிருதமும் தமிழும் தம் தம் இடம்பெற்றிருக்கின்றன. பழைய வடமொழி நூலாகிய வேதங்களில் "ஆரிய" என்ற சொல் எத்தனைமுறை பாவிக்கப்பட்டது, என்ன கருத்துடன் அங்கே பாவிக்கப்பட்டது என்றும் கவனிக்கப்பட வேண்டும். வேதத்தில் தேவ அசுர சம்பவங்களும் உண்டு, இவை யாரைக்குறிக்கிறது? சுருதிகளில் இல்லாத சொற்களைச்சிமிர்திகளிற்காணலாம். இங்கு 'ஆரிய'என்னும் சொல் இனத்தைக்குறிக்கிறதா அல்லது ஆரிய பண்பாட்டைக் குறிக்கிறதா என்பது ஆராயப்படவேண்டியது. இதிகாசமாகிய இராமாயணம் பாரதம் "ஆரிய" என்னும் சொல்லுக்குக் கொடுக்கும். மதிப்பு மிக உயர்ந்தது. காவியங்களும் இலக்கியங்களும் அப்படியே. ஆரியர் என்று ஒரு இனம் அல்லது ஆரிய பண்பாடு உடையவர்கள் வெளிநாட்டிலிருந்து 'ஆரியவர்ஷா'வுக்குள் நுழைந்ததாக ஒரு வடமொழி நூலும் கூறுவதாக எண்ணப்படவில்லை. இந்தியாவிலல்லாது வேறு ஒருநாட்டிலும் "ஆரிய"என்ற சொல் பாவித்திருப்பதாக தோன்றவில்லை. வடமொழி கற்ற மேல்நாட்டுப் பண்டிதர்கள் ஆரிய பாஷையாகிய சம்ஸ்கிருதத்தைத் தம் மொழிகளுடன் ஒப்பு நோக்கிய பின் தாமும் ஆரியரெனக் கருதினார்கள். ஆனால் பாஷை வேறு இனம்வேறு என்பதை மறந்துவிட்டார்கள். ஜெர்மனியில் கிற்லர் ஆரியச்செருக்கைக் கையாண்டு பெரும் துன்பம் உலகிற்கு விளைவித்துவிட்டார். தமிழ்நாட்டில் ஆரியர் திராவிடர் என்னும் சண்டை நடந்திருக்கிறது. கிறித்துவ ஆண்டுக்கு முன் சமண பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் பரம்பிய பின்தான் ஆரிய தமிழ் சச்சரவு கூடியது, கிறித்தவ ஆண்டில் பின் சைவ வைஷ்ணவ மறுமலர்ச்சியின் காரணமாக வடமொழியிலுள்ள ஆகமங்கள் அநேகமாகக் கைக்கொள்ளப்பட்டதென்று கருத இடமிருக்கிறது. மேலும் 5-ம் நூற்றாண்டில் தோன்றிய மகாவம்சமாகிய இலங்கைச் சரித்திரம் பௌத்த சமயத்தையும் சிங்கள இனத்தையும் புகழ்ந்து பாடியது. இதுவே சிங்கள சாதி அபிமானத்தை உண்டுபண்ணியது இன்றும் இப்பெரும் நூல் சிங்கள மக்களின் மூலதனமாகப் பாராட்டப்படுகிறது. தமிழ் மொழியில் இப்பேர்ப்பட்ட நூல் கிடையாது, தமிழ்ச்சாதியையும் தமிழ் சமயத்தையும் புகழ்ந்து பாடிய ஒரு நூல் இல்லாதது அவர்களின் சரித்திர வளர்ச்சிக்குத் தடையாய் இருந்தது. மூவேந்தர்களைப் புகழ்ந்து பாடிய சில்லறைக் கோவைகள் தான் நாம் காணக்கிடைக்கின்றன. தமிழ் இனத்தையும் தமிழ் பண்பாட்டையும் புகழ்ந்தும் புகட்டியும் இருந்தால் அப்பேர்ப்பட்ட நூல் தமிழரின பெரும் பாக்கியமாகக் கருதப்படும்.

பௌத்த சமயமே ஆரியப் பண்பாட்டை விளக்கும் சமயம் அதனாலேதான் சிங்கள மக்கள் தங்களை ஆரியராகக் கருதுவது. தமிழில் தேவார திருவாசகதிருவாய்மொழிக்கு முன் சுருதி இருந்ததாகக் காணோம். பௌத்த தரும ஸ்தாபனரான கௌதம புத்தர்போல், யேசுக்கிறீஸ்து போல் மொகமதுநபிகளைப் போல் ஒருவர் தமிழ்மக்களுள் தோன்றியதாகவும உலக முழுதுக்கும் உவந்த ஒரு வேதத்தை, ஆகமத்தை, சமயத்தை மக்களுக்கு அளித்ததாக நாம் காணவுமில்லை, கேள்விப்படவுமில்லை திருக்குறளைத்தந்த வள்ளுவனாரும் தாம் உலகத்திற்கு ஒரு மறையைத் தந்ததாகக் கூறவும் இல்லை. தான் ஆண்டவனின் தீர்க்கதரிசி என்று விழம்பவுமில்லை. திருவாசகத்தைத் தந்த வாதவூரடிகளும் புதிதாகத் தாம் ஒரு வழி நூல் செய்ததாகச் செப்பவில்லை. ஆனால் இதை ஒரு இழுக்காகக் கருதவும் இடமில்லை. சாதி அபிமானம் சமய அபிமானம் மக்களுக்கு நன்மை மாத்திரமல்ல கேட்டையும் விளைவிக்கிறதை நாம் காண்கிறோம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது மிகச் சிறந்த நோக்கம.

செளரிராயன்.

## ஆரியர்

இந்தியாவிற்கு வடமேற்குப் பகுதியால், கிட்டத்தட்ட 1500 வருடங்களுக்கு முன், புகுந்த 'திராவிடம் பேசும் மக்களின் நாகரீகத்தை அழிக்க எத்தனித்தவர்கள், தங்களை 'ஆரியர்' என்று பெயரிட்டார்கள்.

திரு. ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் இந்துசாதனப் பத்திரிகையில் 7-10-60 ல் கூறியபடி, 'ஆரியர்' என்று ஒருசாதி தற்போது உலகத்தில் இல்லை. ஆனால் அழியாத்திராவிடம் பேசும் மக்கள் ஆதிகாலம் தொடங்கி இந்தியாவில் வசித்து வருகின்றார்கள். அவர்களிலே தலைசிறந்தவர்கள் தமிழ் பேசும் மக்கள்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலியவையும் தமிழ் இனத்தில் சேர்ந்த பிற சிறு மொழிகளும்—'திராவிடம்' என்று அழைக்கப்படுவன, இம்மொழிகளுக்கும் இம்மொழிகள் பேசும் மக்களுக்கும் விசேட அடையாளங்கள் உண்டு.

S. J. குணசேகரம்

### உண்ணாவிரதம்

சிறிமாவோ ஆட்சியிலும் தொடங்கிவிட்டது உண்ணாவிரதம். பொரலைத் தொகுதிப் பாராளுமன்றத்து அங்கத்தவர் வைத்தியகலாநிதி சில்வா இலங்கைப் போக்குவரத்துச் சபையைப்பற்றித் தாம் கேட்ட கேள்விகளைப்பற்றி மந்திரியாரை விசாரணை செய்யத் தூண்டுவதற்காக உண்ணாவிரதமிருக்கின்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம் கொழும்பு

—0—

கொழும்பு இந்து வாலிபர் சங்கச் செயற்குழுக் கூட்டம் சென்ற 10-10-60 திங்கட்கிழமை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது. திரு. ச. சேதுநாதன் தலைமை வகித்தார். கீழ்க்காணும்தீர்மானங்கள் ஏகமனதாகச் செய்யப்பட்டன.

1. கதிர்காமத்தில் உள்ள இந்துமடாலயங்களை நீக்க வேண்டுமென்று அரசாங்கம் தற்போது செய்துள்ள தீர்மானத்தை இச்சங்கம் கண்டிப்பதுடன் இதற்கெதிராகத் தங்கள் கண்டனங்களை அரசாங்கத்துக்குத் தீர்மானங்கள் மூலம் உடனடியாகத் தெரிவிக்குமாறு சகல சைவ சமய தாபனங்களையும் சமயப்பெரியார்களையும் கேட்டுக்கொள்வதெனத்தீர்மானிக்கப்பட்டது.

2. இலங்கையில் உள்ள சைவக்கோவில்களில்இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட மிகச்சிறிய தொகையினரான இந்துமதக் குருமார்கள் சேவை செய்கின்றார்கள். இவர்கள் மிகக் குறைவான ஊதியம் பெறுவோராகவிருக்கின்றார்கள். வெளிநாட்டார் மீது விதிக்கப்பட்டுள்ள வரி ரூபா 400/- வருடாந்தம் அறவிடவேண்டும் என்னும் விதி இவர்களைப் பொறுத்தவரை நியாயமற்றதாகும். இது கையாளப்பட்டால் இவர்கள் இந்நாட்டை விட்டு உடனே சென்றுவிடுவார்கள். அதனால் இந்த நாட்டில் இந்துசமய நலன் பெரிதும் பாதிக்கப்படுமென இச்சங்கம் அஞ்சுகிறது. எனவே இவர்களிடம் இவ் வரியை அறவிடவேண்டாமென நிதியமைச்சரை இச்சங்கம் வேண்டிக் கொள்கிறது.

3. திருக்கேதீச்சரத்தில் இவ்வருட இறுதியில் நடைபெறும் சைவசித்தாந்த மகாசமாச மாநாட்டிற்குத்தொண்டர்களை அனுப்புவதெனவும் நிச்சயிக்கப்பட்டது,

4. அடுத்த மாதம் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் நினைவு விழாவைத் தகுந்தமுறையில்கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. —— (கடித)

### பிரிவுபசாரம்

அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் சென்ற முப்பது வருடம் தலைமை ஆசிரியராயிருந்து 8-10-60 இளைப்பாற வேண்டியிருந்த திருவாளர் அ. பொன்னுத்துரை அவர்களுக்கு பிரிவுபசாரக் கூட்டம் நடத்தப்பட்டது.

5-10-60 புதன் கிழமை மத்தியானப் போசனத்தின் பின் மாலை 3 மணியளவில் ஆசிரியர் திரு. வ. நல்லதம்பி அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திருவாளர் பொன்னுத்துரை அவர்களின் சேவை நலங்களைத் தலைவர் பாராட்டிப் பேசினர். பின்பு ஆசிரியர்களும் மாணவர்களும்பாராட்டுரைகள் வழங்கினர்கள். புகைப்படம் தேநீர்விருந்து ஆகியவற்றின்பின் பிரியும் ஆசிரியரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

—

### அடைவு நகை

### ஏலவிற்பனவு விளம்பரம்

—

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, 415/A காங்கேசன்துறை வீதி க. நடராசா அவர்களின் அடைவுகடையில் 1-3-59ந் திகதி தொடக்கம் 31-8-59ந் திகதி வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 1960ம் ஞு நவம்பர் மீ 15உ (15-11-60) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படுமென்பதை அறிவிக்கின்றேன்.

வி. சே. குட்டிப்பிள்ளை

வெந்தீஸ் மேஸ்தர்.

18-10-60.

M 133 21, 28-10-60.

### தொழில் நுட்பக் கல்லூரி

(SCHOOL OF TECHNOLOGY)

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்ற்றில் வகுப்பு ஆரம்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பர். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.

### ஏழாலை - தென் மேற்கு

## இந்துசமய விருத்திச் சங்கம்

### பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பது நியாயமாகாது

"அரசாங்க மதபாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்துவதனல் பெரும் தீங்கு விளையும்; ஆகையால் மதபாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தக்கூடாது"

மேற்படிபிரேரணை ஏழாலை தென்மேற்கு இந்துசமயவிருத்திச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் ஏகமனதாக நிறைவேறறப்பட்டது.

மேற்படிவிழா 16-10-60ல் ஏழாலைச் சைவ சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் திரு பொ. தம்பிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்ற ஆண்டு அறிக்கை, தனதிகாரியின் அறிக்கை ஆகியவை சமர்ப்பிக்கப்பெற்றபின் 'திருஞானசம்பந்தர்" என்னும் விஷயம்பற்றி செல்வி முகலாதேவியாலும், "சைவசமயம்" என்னும் விஷயம்பற்றி செல்வன் ஞா. செந்தூர்முருகனலும் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன. பின் சைவசித்தாந்தச் செம்மல் மு. வயிரமுத்து அவர்கள் "மாணிக்கவாசகர்" என்னும் பொருள் பற்றி சிறந்த விரிவுரைநிகழ்த்தினர்கள். தேவாரப்போட்டி, பேச்சுப்போட்டி, வியாசப்போட்டி, சமயபாட எழுத்துப்போட்டி என்பவற்றில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் திருவாளர் மு. வயிரமுத்து வழங்கினர்கள். பின்பு அடுத்த ஆண்டிற்குரிய உத்தியோகத்தர் தெரிவுகள் நிகழ்ந்தன.

தலைவர்: திரு. மு. சிற்றம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்), உபதலைவர்கள்: திருவாளர்கள் த. சிவலிங்கம், பொ. தம்பிப்பிள்ளை, அ. பேரம்பலம். காரியதரிசி: திரு. க. சுந்தரம் அவர்கள். உபகாரியதரிசி: திரு. நா. இரத்தினம் அவர்கள். தனதிகாரி: திரு. செ. சின்னத்துரை அவர்கள்,

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் மு. ஞானப்பிரகாசம், ஐ. நாகமுத்து, பூ.கந்தையா, ச. சச்சிதானந்தம், மு. பாலசுப்பிரமணியம், ச சின்னையா. கூட்டம் 9 மணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது கலைந்தது.

—

### அரசாங்கம் எடுப்பதற்கு எதிர்ப்புக்கூட்டம்

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை ஆட்சேபிக்கவும், அவ்விஷயமாக ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றவும், சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வழக்கறிஞர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு பகிரங்கக் கூட்டம் ஐப்பசி எஉ (23—10—60) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணியளவில் நடைபெறும். —

# தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்க வேண்டுகோள்

8-10-60 இல் நடைபெற்ற அகில இலங்கை அரசாங்க தற்காலிக தமிழ்த்தட்டெழுத்தாளர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் கருத்துக்கள் நிதிமந்திரிக்கு அனுப்பி, குறித்த குறைகளை நீக்கும்படி கேட்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

1. 1955 - ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் ஒரே அரசாங்க விளம்பரத்தின்மூலமும் ஒரே சோதனைமூலமும் ஆங்கிலம், சிங்களம், தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் முதன் முறையாக நியமிக்கப்பட்டனர். நியமனம்பெற்றவர்கள்: ஆங்கிலம் 120. சிங்களம் 80. தமிழ் 6.

2. 1956 முதல் 1960 வரையும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சைகள் நடைபெற்றன, தமிழில் நடைபெறவில்லை. இக்காலத்தில் ஆங்கிலத்தின் தட்டெழுத்தாளராக நியமனம் பெற்றவர்கள் தொகை: 324. சிங்களத்தில் தட்டெழுத்தாளராக நியமனம் பெற்றவர்கள் தொகை 278.

3. 1956முதல் 1960வரையுள்ள காலத்தில் தமிழ்த் தட்டெழுத்தாளர்களை அரசாங்க இலாகாக்கள் பிரதான தொழில் இணைக்காரியாலயத்தினூடாக 40-க்கு மேற்பட்டோரைத் தற்காலிக சேவையில் அமர்த்தியுள்ளன. இதனல் தற்காலிக சேவையிலுள்ள தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் ஏனைய சிங்கள, ஆங்கில தட்டெழுத்தாளர்கள் அனுபவிக்கும் சலுகைகளையோ, உரிமைகளையோ அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், சமவேலை செய்யும் சமசம்பளம் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆண்டுகள் பல கடந்தும், அரசாங்கம் சில ஆட்சிக்கு வந்து மறைந்தும் எமது இடர்களும், குறைகளும் இன்னும் நீக்கப்படவில்லை. வரவு செலவுத்திட்ட விரிவுரையின்போது தாங்கள் தொழிற்சங்கங்களின் கஷ்டங்களையும், இடர்களையும் பொறுமையோடு கேட்டுத் தீர்க்கும் வழிவகைகளைச் செய்வதாக வாக்களித்ததனை நினைவூட்ட விரும்புகிறோம். தற்காலிக சேவையிலிருக்கும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களாகிய எங்களுக்கு உடனே "போட்டிப்பரீட்சை" வைத்து நிரந்தரமானதும், இளைப்பாறும் சம்பள உரிமையுடையதுமான பதவிகளை வழங்கி எமது சேவைக்கும் சிங்கள, ஆங்கில தட்டெழுத்தாளர்கள் சேவைக்கும் உள்ள வேற்றுமையை நீக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். 1955-ஆம் ஆண்டு நடைபெற்றதுபோல் இனிமேல் நடைபெறும் தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையினை மும்மொழிகளிலும் நடத்துமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம். இது கிடைத்தமையை அறிவிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

—

### சைவம் வளர்க்கும் சங்கங்கள் அத்தியா...

1-ம் பக்கத்தொடர்ச்சி

ளாகக்கொண்டு நாம் படித்துள்ளோம். தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சமாஜம் நம் அறிவைப் பரீட்சித்துப் பட்டமும் தந்துள்ளது. ஷை சமாஜ மகாநாடு திருககேதீச்சரத்தில் இவ்வருடக் கடைசியில் நடக்கவிருக்கிறது. அம்மகாநாடு சிறப்புறச் சைவப்புலவர்களும் ஒன்று சேர்ந்து தொண்டுபுரிய வேண்டியவர்களாகிறோம். ஆகவே இச்சங்கத்தினை நாம் ஆரம்பிக்கும் காலம் மிகப் பொருத்தமானதேயாகும். அன்றியும் பாடசாலைகளிற் சமய போதனை செவ்வனே நடைபெற உதவி செய்வதும், விவேகானந்த சபையாரின் சமய பாடப் பரீட்சைக்கும், அரசாங்கம் நடத்தும் சமய பாடப் பரீட்சைக்கும் இச்சங்கம் உதவியளித்தலும் இன்றியமையாததாகுமெனவும் எடுத்துக் கூறினர்.

இவ்வமையம் சைவப் புலவர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் பொறுப்பு அளவெட்டி சதானந்த வித்தியாசாலை ஆசிரியர் சைவப்புலவர் ச. சச்சிதானந்தம் அவர்களைச் சார்ந்ததாகும் என்று கேட்டுக்கொண்டு தமது சொற்பொழிவை நிறைவேற்றினர்.

இச்சங்கத்தின் போஷகராக திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சைவப்புலவர் திரு. வ. செல்லையா அவர்கள் தலைவராயும், சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்தம் செயலாளராகவும், சைவப்புலவர் திருமதி. அப்பாக்குட்டி தங்கம்மா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். சைவப் புலவர்கள், இ. நவரத்தினம், ஐ. இராசரத்தினம். சி. வல்லிபுரம் என்போர் செயற்குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்,

—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 21-10-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org